**ஆக்கரபதன பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆக்கரபதன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆக்கரபதன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ) மற்றும் (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் 2(இ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள இரண்டு வழக்குகள் காணப்பட்ட போதும் அவை தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | அடுத்த ஆண்டுகளின் போது சீராக்குவதாதாக | வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் போது நோர்வுட் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ஆயுர்வேத இருப்பின் பெறுமதி ரூபா 240,000 தொகை சபைக்கு அறவிடப்படாது இருந்ததுடன் அது நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய தொகையாகவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் கணக்குகளில் குறித்த கடன்கொடுத்தோர் மீதிகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,514,359 ஆன சொத்துக்களும் ரூபா 495,313 ஆன பொறுப்புக்களும் குறைத்து காண்பித்தமை மற்றும் ரூபா 77,800 ஆன வருமானம், ரூபா 24,138 ஆன செலவினம் மற்றும் ரூபா 111,493 ஆன பொறுப்புக்கள் | அடுத்த ஆண்டின் போது குறித்த பெறுமதிகளை சரியாக கணக்கீடு செய்வதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக காண்பிக்கப்பட்டும் இருந்தவை மீளாய்வாண்டிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த ஐந்தொகை மற்றும் உரிய பட்டடோலைகளின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களில் ரூபா 808,863 ஆன வேறுபாடு மீளாய்வாண்டிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது குறித்த பெறுமதிகளை சரியாக கணக்கீடு செய்வதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தவறுதலாக காண்பிக்கப் பட்டிருந்த ஆரம்ப மீதியை சீராக்குவதற்காக 41 மற்றும் 46 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் முறையே ரூபா 102,700 மற்றும் ரூபா 52,134 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கு மற்றும் அலுவலக உபகரணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்கம் செய்வதாக | கணக்கு மீதிகள் சரியாக இருத்தல் வேண்டும். |
| (உ) | சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 357,248 ஆன நீதிமன்ற தண்டப்பணத்தை உரிய நிறுவனங்களிடமிருந்து கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் கணக்கு களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | தலவாக்கலை நகர சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 1,526,100 ஆக இருந்ததுடன் ஆண்டில் நிலுரைவயிலிருந்து பெறுவனவு ரூபா 1,708,100 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 182,000 திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 556,520 என ரூபா 374,500 தொகை கூடுதலாக திரண்ட நிதியத்திற்கு செலவு | அடுத்த ஆண்டில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 752,300 ஆன விளம்பர பதாதைகள் கட்டங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.3. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் மீதி ரூபா 20,389,351 ஆக இருந்ததுடன் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு மீதி ரூபா 19,422,323 ஆக இருந்தமையால் ரூபா 967,028 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டுகளில் குறித்த மீதிகளைச் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களில் செல்லுபடிக் காலம் முடிவடைந்து 02 மாதங்கள் முதல் 09 ஆண்டு வரையான காலம் கடந்திருந்த போதும் 12 நிறுவனங்கள் மற்றும் 12 வியாபாரங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொண்டிருக்க வில்லை | அனுமதி பத்திரங்களை பெற்றுக கொள்ள வேண்டிய வியாபார இடங்களுக்காக அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு அறிவூட்டுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| | நி.பி 571(3) | 2 ஆம் ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலமொன்று காணப்பட்ட ரூபா 644,542 ஆன 22 | கருத்து தெரிவிக்கவில்லை. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீதிகள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை | | |
| (இ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படாமல் 2008 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்தது | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் அதற்காக எவ்வித பொறுப்பேற்றலும் கிடைக்கவில்லையென | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,211,805 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,579,585 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்ப ட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,959,000 | 2,916,056 | 2,755,710 | 2,089,498 | 1,958,038 | 2,521,992 | 1,701,193 | 1,929,151 |
| (ii) | வாடகை | 94,800 | 4,356 | | 24,125 | 814,760 | 4,356 | 9,630 | 19,769 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,610,000 | 1,447,000 | 1,447,000 | - | 4,040,000 | 1,420,500 | 1,875,800 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 56,170,050 | 2,373,333 | 3,552,433 | 1,090,248 | 55,492,227 | - | 27,905,923 | 2,269,348 |
| | | 60,833,850 | 6,740,745 | 7,755,143 | 3,203,871 | 62,305,025 | 3,946,848 | 31,492,546 | 4,218,268 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்**<br>-------------------------------<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 663,028 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் அதில் 20 தனியார் ஆதனங்களிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியல் ரூபா 145,058 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் 92 ஆதனங்களிலிருந்து 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்'பட்ட காலமாக ரூபா 361,590 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | வருமான உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமையே காரணம் என்பதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) வாடகை<br>------------<br>மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 13 நிறுவனங்களிடமிருந்து அறிவித்தல் பதாதை கட்டணங்கள் ரூபா 778,700 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>-----------------------------------------------<br>மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 519,248 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 571,000 ஆக இருந்தது. . | முத்திரைக் கட்டணங்களின் ஒரு பகுதியொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபைகள் சட்டத்தின் 79,84,85,92,93 மற்றும் 95 ஆம் பிரிவுகளுக்கு இணங்க பொதுக் வாடிகாண்கள் கழிவு நீர் காண்கள், நீர் வழிகள், மலசலகூடங்கள் போன்ற | வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய வீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்த வருவதாக அபிவிருத்தி நிகழச்சிகள் | சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளுக்குரிய நிர்மாண பராமரிபக்பு நடவடிக்கைகள் மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எதுவும் நிறை வேற்றப்பட்டு இருக்கவில்லை. | முன்மொழியப்படாதிருந்ததுடன் நிதி ஏற்பாடு செய்யப்படவில்லை. | |
| (ஆ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் மல அகற்றலுக்காக தேவையான வேலைத்திட்டமொன்றும் அதற்குரிய கலி வண்டி சேவைகளும் நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை. | வருமானம் போதியளவில் இல்லாமையால் நிறைவேற்ற வேண்டிய பொது மக்கள் பயன்பாட்டு சேவைகள் பல நிறைவேற்றப்படாமல் இருந்ததாக | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |
| (இ) | பிரதேச சபைகள் சட்டத்தின் III ஆம் பகுதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேச்சத்தில ஒழுங்கைகளை அமைத்தல், மேம்படுத்துதல், வீதிகளுக்கு பெயரிடல்தனியார் ஆதன உரிமையாளர்களின் நலனுக்காக வீதி நிர்மாணம், சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுதல் போன்ற சேயற்பாடுகள் மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்த நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. பிரகாரம | வருமானம் போதியளவில் இல்லாமையால் நிறைவேற்ற வேண்டிய பொது மக்கள் பயன்பாட்டு சேவைகள் பல நிறைவேற்றப்படாமல் இருந்ததாக | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |
| (ஈ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்ற வேண்டிய போதிலும் 06 பிரதேசங்களில் 474 நுகர்வோரின் ஆய்வுகூடங்களைப் பரிசோதனையின்றியும் சுத்திகரிக்கப்படாமலும் குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடு போதுமாக இல்லாமையால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளில் அநேகமான வற்றை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக | நீர் மாதிரி பரீட்சிக்கப்பட்டு குடிநீரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| (உ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 119 இன் பிரகாரம் குடியிருப்பாளர்களின் தேவைப்பாட்டிற்காக பொது வியாபார சந்தைகள் அல்லது வாரச் சந்தைகள் என்பவற்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடு போதுமாக இல்லாமையால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளில் அநேகமான வற்றை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மண்ராசி நகரில் பயணிகள் மேவுகையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 500,000 ஆன மதிப்பீடொன்று அடிப்படையில் | கருத்துரை தெரிவிக்கவில்லை | அத்துமீறிய நிர்மாணம் அகற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய ஆண்டின் நவம்பர் 01 ஆந் திகதி ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு நிர்மாணம் கையளிக்கப் பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்து குறுக்கு வீதிகள் மற்றும் புதிய பாலங்களை நிர்மாணிப்பதற்காக புயன்படுத்தப்பட்டிருந்த தற்காலிக பாலத்தை இடையூறு செய்து 6x10 மீற்றர் அளவிலான இரண்டு மாடிக் கட்டடிம் ஒன்று அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | புதிதாக கூட்டிணைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக 2019 செப்தம்பலர் 12 ஆந் திகதி கிடைத்திருந்த பணத்திலிருந்து குறித்த செயற்பாட்டை நிறைவேற்றாமல் ரூபா 1,855,755 ஆன மீதியொன்று கணக்காய்வு திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்துரை தெரிவிக்கவில்லை | தேவைப்பாட்டினை விரைவில் நிறைவேற்ற வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தளபாடங்கள் பொருத்திகள் 45, 16 சொத்து உருப்படிகள், காணி மற்றம் கட்டிடங்கள் 05 மற்றும் 06 பொது மலசலகூடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ப்பபட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டுகளில் குறித்த சொத்துக்களின் பெறுமதியை கணக்குகளில் காண்பிக்கப்பபதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென. | சொத்துக்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 1,202,013 ஆன இயந்திரங்கள் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உருப்படிகள் 79 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டன. | அலுவலகத்தை தாபிப்பதற்கு போதியளவு இடவசதிகள் இல்லாமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை பயன்படுத்துவதற்கு முடியாமல் இருப்பதாக | தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு கொள்வனவு செய்ப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்த உபாகரணங்களை பயன்படுத்த வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 செப்தம்பர் 05 ஆம் திகதிய வாகன விபத்து தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் பரிசோதனை | குறித்த வண்டியை தனியார் நிறுவனமொன்றுக்கு அனுப்பி திருத்தம் செவய்வதற்காக | வாகனத்தைத் திருத்தம் செய்து பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடிவடையாமல் இருந்ததுடன் குறித்த வாகனத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தலைவரின் பிரயாணத்திற்காக வாடகை வாகனமொன்று அதற்காக ஆண்டின் போது ரூபா 4,729,849 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடொன்று கோரப்பட்டுள்ளதுடன் வாகன திருத்த வேலைக்கு மதிப்பீடு ஒன்றை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நுவரெலியா பிரதேச சபையிலிருந்து ஆகரபதன பிரதேச சபைக்கு இணைக்கப்பட்ட 11 ஊழியர்கள், 06 ஆண்டுகள் மதல் 24 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த போதும் சேவையில் நிரந்தரமாக்கு வதற்கு உள்ள இயலுமை தொடர்பில் ஆராய்ந்து நிரந்தர மாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஊழியரினதும் தனிப்பட்ட கோவையிலுள்ள குறைபாடுகளைள சரி செய்து வருவதாக | ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 72 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் 02 வருமான பரிசோதகர்கள், தொழிலாளர் பதவிகள் 33 வெற்றிடங்களாக காணப்பட்டமை காரணமாக வருமான சேகரிப்பு ஒழுங்கைகள் பராமரிப்பு மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவம் என்பவற்றை முறைப்படுத்து வதில் சிக்கல்கள் உருவாகியிருந்தன. | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளராட்சி மன்ற ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளதாக | வெற்றிடங்களின் நிரப்புவபதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 10 வருமான விடயங்களில் 02 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 308 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டில் வருமானம் மற்றும் செலவினங்களை முறையாக மதிப்பீட செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு கவனமாக நடவடிக்கை எடுத்து பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

## 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகரில் சேரும் கழிவுகளை வெளியேற்றி மீள்சுழற்சிக்கு தேவையான திண்மக் கழிவுப்பொருள் நிலையமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் நாளாந்தம் சேரும் 237.5 கிலோ கிராம் கழிவகள் வெளியேற்றப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக குறுங்கால நீண்டகால திட்டங்களைத் தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக . | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |